**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் நாள் சனிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், புரட்டாசித்திங்கள் 04 ம் நாள்

**இ.ம.எண். 6/2025**

**in**

**அ.வ.எண். 62/2023**

பெரியசாமி ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

1. தங்கராசு
2. மோகன்குமார் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 16.09.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.M.P.சிவசாமி, M.Com., M.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ ரீகால் செய்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

i) அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் மனுதாரர்/பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்மனுதாரர்கள்/வாதிகளை குறுக்கு விசாரணை செய்தபோது வாதி தரப்பு சாட்சியான PW1 ஐ குறுக்கு விசாரணை செய்தபோது சில முக்கியமான கேள்விகள் கேட்காமல் விடுபட்டுவிட்டது. எனவே எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சியான வா.சா.1 ஐ மீண்டும் ரீகால் செய்து உத்தரவிடாவிட்டால் ஈடு செய்ய முடியாத பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சியான வா.சா.1 ஐ ரீகால் செய்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்/பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2) எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–**

i) மனுதாரர் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிருரையில் இவ்வெதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரரரே கண்டிப்பாக நிரூபணம் வேண்டியது.

ii) எதிர்மனுதாரரை PW1 ஆக கடந்த 11.07.2025ம் தேதி முழுமையாக விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை இல்லை என்று மனுதாரர் தரப்பில் கூறிவிட்டு தற்போது தாவாவில் பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்கு போடப்பட்டுள்ள

நிலையில் மனுதாரர் குறுக்கு விசாரணை செய்ய இம்மனுவினை தாக்கல் செய்வது ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்றாகும். மேற்படி எங்கு வாதி பக்கம் உள்ள சாட்சியத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் பிரதிவாதிக்கு தாவா இடத்தில் எந்த ஒரு உரிமையும் இல்லை என்பது வெளிப்படையாக வெளிச்சம் போட்டு காட்டிவிடுமோ என்று பயந்து நன்கு ஆராய்ந்து மேற்படி தாவாவில் காலம் கடந்த இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அதனால் மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவையாகும். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

<u>5. தீர்வு:–</u>

மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்மனுதாரர்கள்/வாதிகளை குறுக்கு விசாரணை செய்தபோது வாதி தரப்பு சாட்சியான PW1 ஐ குறுக்கு விசாரணை செய்தபோது சில முக்கியமான கேள்விகள் கேட்காமல் விடுபட்டுவிட்டது என்றும் எனவே PW–1 சாட்சியை ரீகால் செய்து உத்தரவிட வேண்டும் என்று சொல்லப்பட்டு எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் எதிர்மனுதாரரை PW1 ஆக

கடந்த 11.07.2025 ம் தேதி முழுமையாக விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை இல்லை என்று மனுதாரர் தரப்பில் கூறிவிட்டு தற்போது தாவாவில் பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்கு போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் குறுக்கு விசாரணை செய்ய இம்மனுவினை தாக்கல் செய்வது ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்றாகும் என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது தாவா 3 ம் அயிட்ட சொத்தான பொது கிணற்றைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 20.11.2023 அன்று பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 05.08.2024 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 27.06.2025 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 11.07.2025 அன்று வா.சா.1 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, கடந்த 23.07.2025 அன்று வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 21.08.2025 அன்று வா.சா.1 சாட்சியை ரீகால் செய்து உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரரை PW1 ஆக கடந்த 11.07.2025 ம் தேதி முழுமையாக விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை இல்லை என்று மனுதாரர் தரப்பில் கூறிவிட்டு தற்போது தாவாவில் பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்கு போடப்பட்டுள்ள நிலையில் மேற்படி தாவாவில் காலம் கடந்த

இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் சொல்லப்பட்டிருந்தாலும் அசல் வழக்கானது தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக எதிர்மனுதாரர்களால் மனுதாரர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குவது நீதியின் பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட போவதில்லை என்பதாலும் தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனைகளை இறுதியாக தீர்க்கும்பொருட்டும் மேற்கொண்டு இந்த வழக்கில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதினாலும் மனுதாரர் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் தற்போது அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வா.சா.1 சாட்சியை ரீகால் செய்யக்கோரி காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதார்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் கால விரயத்தை கருத்திற்கொண்டு இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) செலவு தொகையாக வரும் 24.09.2025 ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 24.09.2025.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.09.20 18:03:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.09.20 18:03:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.